www.Padasalai.Net

www.CBSEtips.in

**காலாண்டுத்தேர்வு - மாதிரிவினாத்தாள் --- 2 ( 2023 )**

**மேல்நிலை முதலாம் ஆண்டு**

**வணிகவியல்**

நேரம் : 3.00 மணி　　　　மதிப்பெண் : 90

**பகுதி --- I**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**　　　　20 × 1 = 20

1. இடத்தடை இதன் மூலம் நீக்கப்படுகிறது ----------
   அ) போக்குவரத்து　ஆ) பண்டகசாலை　இ) விற்பனையாளர்　ஈ) காப்பீடு

2. அன்பு மற்றும் பாசம் அல்லது சமூக சேவை உள்நோக்கம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்
   அ) பொருளாதாரச் செயல்பாடுகள்　ஆ) பண நடவடிக்கைகள்
   இ) பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்　ஈ) நிதி நடவடிக்கைகள்

3. விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் ---------- தடையை நீக்கலாம்.
   அ) இடத்தடை　ஆ) காலத்தடை　இ) அறிவுசார் தடை　ஈ) நட்ட இடர்பாட்டு தடை

4. கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?
   அ) தனியாள்வணிகம்　ஆ) கூட்டாண்மை　இ) கூட்டுறவு சங்கம்　ஈ) நிறுமம்

5. தவறான பொருத்தம் எது?
   அ) கூட்டுறவு சங்கம் --- ஒரு நபர் ஒரு வாக்கு
   ஆ) கடன் சங்கம் --- வேளாண் கடன் சங்கம்
   இ) கூட்டுறவின் கொள்கை --- இலாபம்
   ஈ) கூட்டுறவின் அடித்தளம் --- பரஸ்பர நம்பிக்கை

6. இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தில் ஒருவர் எவ்வாறு உறுப்பினராகிறார்?
   அ) உடன்படிக்கையால்　ஆ) பிறப்பால்
   இ) முதலீட்டின் அடிப்படையில்　ஈ) நிர்வாகத்தின் அடிப்படையில்

7. வேறுபட்ட ஒன்று எது?
   அ) கொற்கை　ஆ) காவிரிப் பூம்பட்டினம்
   இ) குமரி　ஈ) காயல்பட்டினம்

8. கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது?
   அ) பட்டய (சாசன) நிறுமம்　ஆ) அயல் நாட்டு நிறுமம்
   இ) அரசு நிறுமம்　ஈ) சட்டமுறை நிறுமம்

9. கூட்டுறவு தோல்வி அடைவதற்கான காரணம்
   அ) வரம்பற்ற உறுப்பினர்　ஆ) ரொக்க வியாபாரம்
   இ) தவறான நிர்வாகம்　ஈ) இழப்பு ஏற்படுவதால்

10. பன்னாட்டு நிறுமங்கள் பின்வருவனவற்றில் யாரால் கட்டுப்படுத்தப்படுகின்றன?
    அ) கிளைகள்　ஆ) அதன் துணை நிறுவனங்கள்
    இ) தலைமையகம்　ஈ) நாடாளுமன்றம்

11. அரசு நிறுவனத்தின் பங்கு முதலீடு -------- க்கு குறையாமல் அரசு பெற்றிருக்க வேண்டும்.
    அ) 75 %　ஆ) 60%　இ) 95%　ஈ. 51%

12. மிக வேகமான போக்குவரத்திற்கான வழி என்ன?
    அ) தொடர்வண்டி　ஆ) சாலை　இ) கடல்　ஈ) விமானம்

13. புற ஒப்படைப்பின் முக்கிய நன்மை ------------
    அ) உற்பத்தித் திறன்　ஆ) செலவு குறைப்பு　இ) திறன்　ஈ) அலகுகள்

14. RTGS மூலம் குறைந்த பட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும்?
    அ) எவ்வளவு தொகை வேண்டுமானாலும்.　ஆ) 50,000
    இ) 2 லட்சம்　ஈ) 5 லட்சம்

15. சரியான கூற்று எது?
    அ) உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து கனரக சுமைகளுக்குப் பொருந்தாது
    ஆ) விமான போக்குவரத்து வேகமான மற்றும் விலை குறைந்த போக்குவரத்து
    இ) நீர் போக்குவரத்துகளில் குறைந்தளவே மாசு உள்ளது
    ஈ) பெரிய சுமைகளையும் எடையையும் சுமப்பதற்கு விமானப் போக்குவரத்து உகந்தது

16. சமூகப் பொறுப்புணர்வு வணிகத்தில் பண்டங்களை -------- யில் வழங்குகிறது.
    அ) அதிக விலை　ஆ) குறைந்த விலை　இ) நியாயமான விலை　ஈ) மிதமான விலை

17. கடன்பத்திரதாரர்கள் ஒரு நிலையான -------------- விகிதம் பெறத் தகுதியுடையவர்கள்
    அ. பங்காதாயம்　ஆ . இலாபம்　இ. வட்டி　ஈ. இவை எதுவும் இல்லை

18. அமெரிக்க வைப்பு இரசீது வெளியிடப்படுவது
    அ) கனடா　ஆ) சீனா　இ) இந்தியா　ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

19. காப்பீட்டின் அடிப்படை கோட்பாடு -------------- ஆகும்.
    அ) மிக்க நம்பிக்கை　ஆ) கூட்டுறவு　இ) பகர உரிமை　ஈ) அண்மை காரணம்

20. ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதற்கு எந்த வங்கிக்கு அதிகாரம் உள்ளது?
    அ) மைய வங்கி　ஆ) வணிக வங்கி　இ) கூட்டுறவு வங்கிகள்　ஈ) வெளிநாட்டு வங்கிகள்

**பகுதி --- II**

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**　　　　7 × 2 = 14

21. கால அளவின் அடிப்படையில் தொழில் நிதியின் வகைகளை குறிப்பிடுக
22. பெருநிறுவன ஆளுகை இலக்கணம் தருக
23. இந்துச் சட்டத்தின் இரணடு பிரிவுகள் யாவை?
24. தொழில் முறை நன்னெறி பொறுப்புணர்வு என்றால் என்ன?
25. தானியங்கி பணம் வழங்கும் அட்டைப் பற்றி நீவீர் அறிவது யாது?
26. நாளங்காடி என்றால் என்ன?
27. கப்பல் வாடகை ஒப்பாவணம் என்றால் என்ன?
28. மருத்துவக் காப்பீடு என்றால் என்ன ?
29. மத்திய பண்டகக் காப்பகங்களின் இரண்டு பணிகள் குறிப்பிடுக

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT.　9629647613

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT.　9629647613

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

30. மனிதன் தனது தனிப்பட்ட விருப்பங்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை என்னவென்று அழைக்கப்படுகிறது? அதன் வகைகள் யாவை?

## பகுதி --- III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40- க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $7 \times 3 = 21$

31. சேவைத் தொழில்கள் என்றால் என்ன?
32. மருவூர்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் - விளக்குக
33. கூட்டுறவுகளின் குறைபாடுகளை விவரி ( ஏதேனும் 3 )
34. மின்னணு வணிகத்தினால் வாங்குபவர்க்கு ஏற்படும் நன்மைகள் யாவை?
35. இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம் பற்றி கூறுக.
36. தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகள் யாவை? ( ஏதேனும் 3 )
37. உண்மை நேர மொத்தத் தீர்வக அமைப்பு ( RTGS ) பற்றி ஒரு குறுகிய குறிப்பு வரைக
38. சமூகப் பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக. ( ஏதேனும் 3 )
39. குளிர்சாதன பண்டகக் காப்பு என்றால் என்ன?
40. தொழிலில் முதலிடாமலும், மேலாண்மையில் பங்கேற்காமலும் உள்ள கூட்டாளியை எவ்வாறு அழைக்கின்றோம்? அவரைப்பற்றி சிறு குறிப்பு தருக

## பகுதி --- IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** $7 \times 5 = 35$

41. அ) பண்டைய தமிழ்நாட்டில் கடற்கரையோர வர்த்தகம் பற்றி விளக்குக

( அல்லது)

ஆ) தனியாள் வணிகத்தின் நன்மைகளை விவரி. ( ஏதேனும் 5 )

42. அ) கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது? ( ஏதேனும் 5 )

( அல்லது)

ஆ) பல்வேறு வகையான பண்டகக் காப்பகங்கள் யாவை? ( ஏதேனும் 5 )

43. அ) தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மைகளை விளக்குக. ( ஏதேனும் 5 )

( அல்லது)

ஆ) உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் - ஓர் ஒப்பீடு செய்க ( ஏதேனும் 5 )

44. அ) கூட்டுறவு சங்கத்தின் நன்மைகள் யாவை? ( ஏதேனும் 5 )

( அல்லது)

ஆ) பல்வேறு வகையான வங்கிகளைச் செயல்பாடுகளின் அடிப்படையில் வகைப்படுத்துக. உதாரணம் தருக. ( ஏதேனும் 5 )



45. அ) காப்பீட்டின் வகைகளை விளக்குக. ( ஏதேனும் 5 )

( அல்லது)

ஆ) கூட்டுறவு சங்கத்தின் நன்மைகள் யாவை? ( ஏதேனும் 5 )

46. அ) செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 5 )

( அல்லது)

ஆ) பெருநிறுவன ஆளுகையின் நன்மைகளை குறிப்பிடுக. ( ஏதேனும் 5 )

47. அ) பன்னாட்டு நிறுவனத்தின் நன்மைகளை விவரி ( ஏதேனும் 5 )

( அல்லது)

ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் நிறுவனக் கட்டமைப்பு பற்றி விரிவாக விளக்குக

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com